மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 2001-2006 ஆம் ஆண்டு தமிழகத்தில் இருக்கின்ற மலைப் பகுதிகளில் பொதுமக்களுடைய பயன்பாட்டிற்காக 524 பேருந்துகள் இயக்கப்பட்டன. ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில் இயக்கப்பட்ட பேருந்துகள் குறைக்கப்பட்டனவே தவிர, மலைப் பகுதி மக்களுடைய வசதிக்காக பேருந்துகள் கூடுதலாக இயக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற பகுதிகளில், மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று கூடுதல் பேருந்து வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

94—

மீன்பிடித் துறைமுகம்

***81—திரு. அ. நாஞ்சில் முருகேசன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, இராஜாக்கமங்கலத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம்துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ள இராஜாக்கமங்கலம்துறை வளர்ச்சி அறக்கட்டளை கேட்டுக் கொண்டுள்ளபடி பங்குதாரர்களின் பங்கு சதவிகிதம் குறித்த மாற்றங்கள் சரிசெய்யப்பட அரசால் நடவடிக்கை

2011 செப்டம்பர் 7]

எடுக்கப்பட்டு வருகிறது. இவை சரிசெய்யப்பட்டவுடன் கட்டுமானப் பணிகள் துவங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள்.

திரு. அ. நாஞ்சில் முருகேசன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல, மீன்பிடி தூண்டில் வளைவை சரியான இடத்தில் அமைத்தால்தான் அருகில் உள்ள கிராமங்கள் பாதிக்காமல் இருக்கும். காரணம், இதை ஒரு கிராமத்தில் போட்டால் அது இன்னொரு கிராமத்தைப் பாதிக்கிறது. அரசாங்க அதிகாரிகள் அந்தப் பிளானை சரியாகப் போட்டால் இன்னொரு கிராமத்தைப் பாதிக்காது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில், பெரும்பாலும் மீனவக் கிராமங்களில் இருக்கும் அனைவரும் கேட்கின்ற ஒரே கோரிக்கை, தூண்டில் வளைவுத் துறைமுகம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்பதுதான். அந்தத் தூண்டில் வளைவுத் துறைமுகத்தை அமைப்பதால் கடலரிப்புத் தடுக்கப்படுகிறது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அவை அமைக்கப்படாததால், அருகிலுள்ள மீனவக் கிராமங்கள் பாதிக்கப்பட்டு, அங்கெல்லாம் கடலரிப்பு ஏற்பட்டு வருகின்றது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை முதல்முறையாகச் சந்தித்தபோது, ‘கடலரிப்பைத் தடுக்கும் வகையில் மீனவக் கிராமங்களுக்குத் தூண்டில் வளைவுத் துறைமுகம் அமைத்துத் தரவேண்டும்; கடலரிப்பால் பாதிக்கப்படுகின்ற அருகிலுள்ள கிராமங்களுக்குத் தடுப்புச் சுவர்களையும் அமைத்து, அவர்களுக்கு நீங்கள் பாதுகாப்பினை

ஏற்படுத்தித் தரவேண்டும்' என்று அறிவுரை கூறினார்கள். அதன்படி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அதைச் சரியாக ஆய்வு செய்து, உரிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள்.*

திரு. அ. நாஞ்சில் முருகேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலேதான் கன்னியாகுமரி மாவட்டத்தில் தூண்டில் வளைவு அமைக்கப்பட்டது. அதன்பிறகு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி காலத்திலேதான் தூண்டில் வளைவு அமைக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்த இடத்திலும் தூண்டில் வளைவு அமைக்கப்படவில்லை. அதனாலே நாம் இப்போது அதைக் கவனமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நடந்த குடும்ப ஆட்சியை ஒழித்து, மக்களாட்சியைக் கொண்டு வந்து, மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள எங்களுடைய கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, 14-வது மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், என்னுடைய பூம்புகார் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, இந்த வாய்ப்பு கேள்வி கேட்பதற்காகத்தான். (சிரிப்பு)*

2011 செப்டம்பர் 7]

திரு. சு. பவுன்ராஜ்: என்னுடைய தொகுதிக்குட்பட்ட தரங்கம்பாடி பகுதியிலே மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரங்கம்பாடி பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தற்போது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. அந்த ஆய்வறிக்கை பெறப்பட்ட பின்னர், அந்தப் பகுதியில் உள்ள மீனவர்களுடைய நலன் கருதி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு அதை எடுத்துச் சென்று, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், 29 ஊராட்சிகளைக் கொண்டது. அதில் கோவிலூர், தம்பிக்கோட்டை கீழக்காடு, ஆலங்காடு, கரைத்திடல், உப்பூர், தில்லைவளாகம், ஜாம்பானோடை, இடும்பவனம், கற்பகநாதர் குளம், கரையன்காடு, தொண்டியக்காடு மற்றும் முத்துப்பேட்டை பேரூராட்சிகளில் 40 சதவிகிதம் மக்கள் என பெரும்பாலும் மீனவர்கள் வாழக்கூடிய அந்தப் பகுதிகளில், கடந்த 2006 ஆம் ஆண்டு மீனவர்களின் போக்குவரத்திற்கு, அவர்கள் கடலுக்குச் செல்ல வழியில்லை என்ற பிரச்சினை ஏற்பட்டபோது, அன்றைய தி.மு.க. அரசு இரண்டு இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். இதுசம்பந்தமாக கேட்டது ஒரு துறைமுகம்; ஆனால், அவர்கள் இரண்டு துறைமுகங்கள் அமைக்கப்படும் என்று சொல்லிவிட்டுச் சென்றார்களேயொழிய, அதற்குப் பின்னர் அந்த மீன்பிடித் துறைமுகங்கள் இன்றுவரை அமைக்கப்படவில்லை.

ஆகவே, மீனவர்களின் நலன் கருதி, அங்கே ஜாம்பானோடையில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்கு 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை இருக்கிறது. It is the second longest coast line in India. இந்த 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையில் பல இடங்களில் கடல் அரிப்பு ஏற்படுகிறது. ஆக, எங்கெல்லாம் கடல் அரிப்பு தொல்லை இருக்கிறதோ, அங்கெல்லாம் தூண்டில் வளைவு அமைத்துக் கொடுக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசின் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே, தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 4 இலட்சம் குடும்பங்கள் மீன் பிடிக்கும் தொழிலையே நம்பியிருப்பதால், இந்த 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையில் எங்கெல்லாம் அதற்கு சாத்தியக்கூறு உள்ளதோ, அங்கெல்லாம் மீன்பிடித் துறைமுகம் அமைத்துத் தரவேண்டுமென்பதுதான் இந்த அரசின் செயல் திட்டம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 5 ஆண்டுகளுக்குள் இவையெல்லாம் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

85—

குடிநீர்

***1243—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—